IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.66 /2024

dated : 21.01.2025

P.W. : 1

Name : நடராஜன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை

ஒப்பந்த முன் பணத்தை வட்டியுடன் திரும்பக் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வேறு எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். வழக்குரை சொத்துக்கள் தொடர்பாக பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். எனது அலுவலகம் கோயம்புத்தூரில் உள்ளது. பிரதிவாதியின் அலுவலகம் பாண்டிச்சேரியில் உள்ளது என்றால் சரிதான். இரண்டு ஒப்பந்த பத்திரங்களையும் கோயம்புத்துரில் உள்ள எங்கள் அலுவலகத்தில் தயாரித்து பாண்டிச்சேரியில் உள்ள பிரதிவாதியின் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேனா என்றால் அது சம்பந்தமாக எனக்கு ஞாபகமில்லை. நான் இரண்டு ஒப்பந்த பத்திரங்களையும் கோயம்புத்துரில் உள்ள எங்கள் அலுவலகத்தில் தயாரித்து பாண்டிச்சேரியில் உள்ள பிரதிவாதியின் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும் அதில் பிரதிவாதி அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்து ஒரு நகலை எங்களுக்கு அனுப்பிவைத்தார் என்று சொன்னால் அதுவும் எனக்கு ஞாபகமில்லை. வழக்குமூலம் ஒரு பகுதி

கோயம்புத்தூரிலும் மற்றொரு பகுதி பாண்டிச்சேரியிலும் நடந்தது என்றும் எனவே இவ்வழக்கை இந்நீதிமன்றம் விசாரணை செய்ய வழக்குமூலம் ஏதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் பிரச்சனை தொடர்பாக பலமுறை மின்னஞ்சல் பரிமாற்றம் நடைபெற்றது என்றால் சரிதான். ஒரு மின்னஞ்சல் விவரங்களைக் கூட தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மின்னஞ்சல் விவரங்களை தாக்கல் செய்தால் எனது வழக்கு நிலைக்காது என்பதால் அதை தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தனலட்சுமி ஸ்பின்டெக்ஸ் மற்றும் தனலட்சுமி கிரீன்எனர்ஜி ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் நான்தான் நிர்வாக இயக்குநர். இரண்டு நிறுவனங்களையும் நான்தான் நிர்வகித்துவருகிறேன் பெயரளவிற்கு இரண்டு நிறுவனங்கள் என்றால் சரிதான். 20.03.2015 அன்று 25 காற்றாழைகளை வாங்குவதற்காக எனக்கும் பிரதிவாதிக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. ஒப்பந்தம் ஏற்பட்ட நாளிலேயே பிரதிவாதி அனைத்து ஆவணங்களையும் என்னிடம் ஒப்படைத்து அதற்கான கடிதம் ஒன்றையும் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. சில ஆவணங்களையும் மட்டும் கொடுத்தார். வருவாய் துறை ஆவணங்களை கொடுக்கவில்லை. ஆவணங்களை ஒப்படைக்கும்போது என்னென்ன ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது என்று ஒரு கடிதமும் கொடுக்கப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் என்னென்ன ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது என்றால் அதுபற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் பற்றி எனக்கு நன்கு

தெரியும் என்றும் அதில் என்னென்ன ஆவணங்கள் ஒப்பந்த நாளிலேயே எனக்கு ஒப்படைக்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது என்றும் எனவேதான் அதை நான் வேண்டுமென்றே மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஆங்கிலம் தெரியாது. வழக்கு தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலம் தெரியாது என்பதால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் என்ன காரணத்திற்க்காக எந்த சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு கூற இயலாது என்றால் சரிதான். ஸ்பின்டெக்ஸ் நிறுவனத்தின் சார்பில் 25 காற்றாலைகளுக்காக ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரியல்ல ஸ்பின்டெக்ஸ் நிறுவனத்தில் சார்பில் 15 காற்றாலைளுக்கு மட்டும் ஒப்பந்தம் போடப்பட்டது. முதலில் ஸ்பின்டெக்ஸ் நிறுவனத்தின் சார்பில் 25 காற்றாலைக்களுக்கு ஒப்பந்தம் போடப்பட்டு பின்னர் அது மாற்றியமைக்கப்பட்டது என்றால் சரிதான். வாதி நிறுவனமான கிரின்எனர்ஜி நிறுவனத்தின் மூலம் 10 காற்றாலைளுக்கு ஒப்பந்தம் போடப்பட்டது. பிரதிவாதி நிறுவனத்தின் சார்பில் வங்கி மூலம் தடையில்லா சான்று பெற்றுதரும்படி நான் கேட்டிருந்தேன் என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. 23.03.2015 அன்று பிரதிவாதி நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க தடையில்லா சான்று பெற்றுக்கொடுத்தார் என்றால் அதுவும் எனக்கு ஞாபகமில்லை. 30.04.2015 அன்று மின்னஞ்சல் மூலம் ஸ்பின்டெக்ஸ் நிறுவனத்தின் சார்பில் 15 காற்றாலைளையும் வாதி நிறுவனத்தின் சார்பில் 10 காற்றலைகளையும் வாங்குவதற்கு பிரித்து ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்றும் வங்கி கடன்

பெறுவதற்கு எளிதாக இருக்கும் என்றும் கூறி மின்னஞ்சல் அனுப்பினேன் என்றால் மின்னஞ்சல் அனுப்பினேன் தேதி ஞாபகமில்லை. அதனடிப்படையில் இரண்டு தனிதனி ஒப்பந்தங்கள் போடப்பட்டது என்றால் சரிதான். அந்த ஒப்பந்தத்தை எளிதாக்கும்பொருட்டு பிரதிவாதி அவரது வங்கி கடனை அடைத்து தனது வங்கியிலிருந்து தடையில்லா சான்று பெற்று கொடுத்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 04.05.2015 அன்று வங்கியில் கடன் பெறுவதற்கு தாமதம் ஏற்பட்டு வருகிறது என்றும் எனவே ஒப்பந்தத்தை காலநீட்டிப்பு செய்து தரும்படி நான் மின்னஞ்சல் அனுப்பியிருந்தேன் என்றால் சரிதான் ஆனால் வருவாய்துறை ஆவணங்களை கொடுத்தால்தான் வங்கி கடன் கிடைக்கும் என்பதால் அவ்வாறு மின்னஞ்சல் அனுப்பியிருந்தேன். நான் அந்த மின்னஞ்சலில் வருவாய் துறை ஆவணங்களை பற்றி ஏதும் கூறவில்லை என்றால் அது ஆங்கிலத்தில் உள்ளது என்பதால் அதுபற்றி எனக்கு தெரியாது. 12.05.2015 அன்று நான் கேட்டுக்கொண்டதன்பேரில் பட்டா மற்றும் வாரிசுசான்று மற்றும் ஆவண நகல்கள் எனக்கு அனுப்பி வைக்கப்படுவதாக பிரதிவாதி கடிதம் அனுப்பினார் என்றால் சரியல்ல. 04.06.2015 அன்று மீண்டும் வங்கி கடன் பெறுவதற்கு தாமதம் ஏற்படுவதாகவும் எனவே காலநீட்டிப்பு செய்துதரும்படியும் கேட்டியிருந்தேன் என்றால் சரிதான். அதற்கான காரணத்தையும் குறிப்பிட்டிருந்தேன். நான் கூறுவது தவறு என்றும் கடன் பெறுவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது என்று மட்டுமே கூறியிருந்தேன் என்றால் சரியல்ல. 18.06.2015 அன்று வங்கியில் கடன் பெறுவதில்

தாமதம் ஏற்பட்டு வருகிறது என்றும் தங்களை எதிர்கொள்வதே வருத்தமாக உள்ளது என்றும் தாமதத்திற்கு மன்னித்துக்கொள்ளும்படி கூறி மின்னஞ்சல் அனுப்பியிருந்தேன் என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. 30.06.2015 அன்று வங்கியில் கடன் பெறுவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது என்றும் தாமதத்திற்கு மன்னித்துக்கொள்ளும்படி விரைவில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்துகொள்வதாகவும் எனவே காலநீட்டிப்பு செய்துதரும்படியும் கூறி மின்னஞ்சல் அனுப்பியிருந்தேன் என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதி 01.07.2015 அன்று அனுப்பிய கடிதத்தில் 04.07.2015 வரை மட்டும் காலநீட்டிப்பு செய்து தருவதாகவும் அதற்குள் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்துகொள்ளவில்லை என்றால் வேறு நபர்களுக்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் என்று கூறி மின்னஞ்சல் அனுப்பியிருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கேட்டுக்கொண்டதன்பேரில் 01.08.2015 அன்று ஒரு புதிய ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது என்றால் சரிதான். பழைய ஒப்பந்த ஷரத்துக்கள் அனைத்தையும் புதிய ஒப்பந்தத்தில் கொண்டு வந்தோம் என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு ஏற்பட்ட புதிய ஒப்பந்தத்திலும் வருவாய்துறை ஆவணங்கள் பற்றிய விவரங்கள் கூறப்படவில்லை என்றால் எனக்கு அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது. நான் மீண்டும் பிரதிவாதிக்கு 30.09.2015 அன்று அனுப்பிய கடிதத்தில் வங்கி கடன் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதாகவும் எனவே காலநீட்டிப்பு செய்துதரும்படி மின்னஞ்சல் அனுப்பியிருந்தேன் என்றால் ஞாபகமில்லை. 08.10.2015 அன்று அனுப்பிய

மின்னஞ்சலிலும் பிரதிவாதி காலதாமதத்தை பொறுத்துக்கொண்டதற்கு அவரை பாராட்டி மேலும் கால நீட்டிப்பு தரும்படி குறிப்பிட்டிருந்தேன் என்றால் ஞாபகமில்லை. அந்த கடிதத்தில் நான் விண்ணப்பித்திருந்த வங்கியில் கடன் கிடைக்கவில்லை என்றாலும் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியிலாவது கடன் பெற்று தருகிறேன் என்று கூறியிருந்தேன் என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. 05.10.2015 அன்று வங்கியில் கோரும் வட்டிவிகிதம் அதிகமாக உள்ளது என்றும் கடன் கிடைத்துவிட்டது என்றும் எனவே வட்டியை குறைக்க பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது என்றும் மின்னஞ்சலில் குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான் ஆனால் தேதி ஞாபகமில்லை. எனவே இதுதொடர்பாக 04.12.2015 அன்று எங்கள் இருவருக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தையில் எனக்கு இரண்டு வாய்ப்புகள் வழங்கப்பட்டது என்றும் அதில் 15.01.2016 க்குள் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்றும் அல்லது அன்றைய தினமே ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டு முன்பணத்தை இழக்க வேண்டுமென்றும் பேசிக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. 07.01.2016 அன்று அனுப்பிய கடிதத்தில் 04.12.2015 அன்று நடைபெற்ற சந்திப்பை ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. 13.01.2016 அன்று பிரதிவாதி எனக்கு அனுப்பிய கடிதத்தில் ஒப்பந்தம் முறிந்துவிட்டதாக கூறியிருந்தார் என்றால் சரிதான் தேதி ஞாபகமில்லை. 07.09.2016 அன்று நான் பிரதிவாதிக்கு அனுப்பிய கடிதத்தில்தான் வருவாய்துறை ஆவணங்கள் பற்றிய பிரச்சனையை

முதன்முறையாக எழுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி 18.10.2016 அன்று அனுப்பிய கடிதத்தில் ஒப்பந்தம் இரத்தாகிவிட்டது என்றும் எனக்கு பதில் அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். முதன்முதலாக 25 காற்றாலைகளுக்கான ஒப்பந்தம் செய்துகொண்ட காலத்திலேயே நாங்கள் கேட்டுக்கொண்ட ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் நான் தற்போது இவ்வழக்கிற்காக ஆவணங்கள் பற்றி புதிதாக கூறிவருகிறேன் என்றால் சரியல்ல. 15 காற்றாலைகளை கிரயம் பெறுவதற்கான கடனுக்கு விண்ணப்பிக்கும்போது எனக்கு வருவாய்துறை ஆவணங்கள் தேவைப்படவில்லை என்றும் வாதி நிறுவனத்தின் சார்பில் கடனிற்கு விண்ணப்பிக்கும் காலத்திலும் வருவாய்துறை ஆவணங்கள் தேவைப்படவில்லை என்றும் என்னால் ஒப்பந்தப்படி நடந்துகொள்ளமுடியவில்லை என்பதால்தான் தற்போது புதிதாக ஒரு காரணத்தை கூறிவருகிறேன் என்றால் சரியல்ல. வருவாய்துறை ஆவணங்கள் தேவையில்லாமலேயே எனக்கு இரண்டு ஒப்பந்தங்களுக்கும் வங்கி கடன் கிடைத்தது என்றும் சொன்னால் சரியல்ல. நான் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் 19 வது பிரிவின் படி ஒப்பந்தத்தின்தரப்பினர் எவரேனும் தவறு செய்தால் அவரே ஒப்பந்த இழப்பிற்கு பொறுப்பாக வேண்டுமென்று நஷ்டஈடு வழங்கவேண்டுமென்று உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. 25 காற்றாலைகளுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டு அதை இரண்டாக பிரித்து வாதிக்கு 10 காற்றாலைகளுக்கு மட்டும் தனியே ஒப்பந்தம் செய்துகொண்டதால் பிரதிவாதி குறைந்த காற்றாலைகளை வியாபரம் செய்வதில்

சிரமம் ஏற்பட்டு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்கண்ட குறைகள் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும் வாதி தரப்பிலான தவறுகளை மறைப்பதற்காக பொய்யான விவரங்களை கூறி வழக்கு தாக்கல் செய்து அதற்கேற்ப சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.01.21 16:53:31 +0530